# மாதிரி விடைகள்

## 03104 – முகாமையியலும் வியாபாரப் பொருளியலும்

கணக்கியலிலும் வியாபாரத்திலும் சான்றுப் பத்திரப் பரீட்சை I
மார்ச் 2014

NOT FOR SALE

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்

முழுப் பதிப்புரிமையுடையது

## வினாப்பத்திரம்‘A’

## பல்தேர்வு வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 1 | 11. | **1** |
| 2. | **1** | 12. | **3** |
| 3. | **2** | 13. | **1** |
| 4. | **1** | 14. | **4** |
| 5. | **1** | 15. | **1** |
| 6. | **3** | 16. | **4** |
| 7. | **3** | 17. | **4** |
| 8. | **2** | 18. | **4** |
| 9. | **2** | 19. | **1** |
| 10. | **4** | 20. | **4** |

NOT FOR SALE

**விடை இல. 01**

(a) ஊழியம் (கூலி) - கூலிக் கொடுப்பனவுக்காக மனித காரணிகளை வழங்குவது.
- ஒதுக்கப்பட்ட வேலையை மேற்கொள்வது

தாளாண்மையாளர் (Entrepreneur) - வியாபாரத்தை இலாபத்திற்காக திட்டமிடுதல்.
- இடருக்கு (risk) முகங்கொடுத்தல்.

(b) மாற்று வருவாய் (transfer earnings) – உற்பத்திக் காரணியொன்றின் மாற்று வருவாய் என்பது அந்தக் காரணியை வேறு தொழில் வழங்குனருக்கு அல்லது வேறு தொழிலுக்கு மாற்றுவதை தடைசெய்வதற்கு தேவையான குறைந்தபட்ச கொடுப்பனவு.

பொருளியல் வாடகை (Economic rent) – மாற்று வருவாய்க்கு மேலதிகமாக உழைக்கும் தொகை.




(c) ஒரு உற்பத்திச் சாத்திய வளையி உற்பத்திப் புள்ளியிலிருந்து வெளியாக வளைந்து இருப்பது அதிகரிக்கும் சந்தர்ப்பக் கிரயத்தை காட்டுகின்றது. இதற்கான காரணம், ஒரு பொருளின் உற்பத்தி அதிகரிக்கும்போது மற்றைய பொருள் இழக்கும் கணியம் அதிகமாக இருப்பதனாலாகும். இதனை கீழுள்ள வரைபடத்தின் மூலம் காட்டலாம்.




NOT FOR SALE

மேற்படி உற்பத்திச் சாத்திய வரைபில் மேலிருந்து கீழ்நோக்கி நகரும்போது (A யிலிருந்து D க்கு) X இன் ஒவ்வொரு மேலதிக அலகும் Y யின் அதிக அலகுகளை கைவிடுவதன் மூலம் மாத்திரமே பெறப்பட முடியும் என்பதனை இது காட்டுகின்றது. இதுவே அதிகரிக்கும் சந்தர்ப்பக் கிரய கோட்பாடாகும். அதிகரிக்கும் சந்தர்ப்பக் கிரயம் ஏற்படுவது வளங்கள் ஒரே தன்மையற்றவையாக இருப்பதன் விளைவாகும்.

(d) கலப்புப் பொருளாதாரமொன்றில் அரச தலையீடு தேவைப்படுவது:

- ஏகபோக உரிமைக்கான (monopolies) சந்தை அதிகாரத்தை கட்டப்படுத்துவதற்கு.
- வரிகளின் ஊடாக தனிநபர்களுக்கு இடையில் செல்வத்தை மீளப்பகிர்வதன் மூலம் சுயாதீன சந்தை முறைமையின் சமனின்மையை திருத்துவதற்கு.
- தனியார் நிறுவனங்கள் போதுமான அளவிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விலையிலும் வழங்க விரும்பாத பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு. உதா: சமூகரீதியில் விரும்பப்படும் ஆனால் தனியார் நிறுவனங்களுக்கு போதிய இலாபத்தை தராத பொருட்கள்.
- பொதுநலனுடைய சேவைகளை வழங்குவதற்கு. உதா: நீதிச்சேவை முறைமை மற்றும் ஆயுதப்படை.
- தனியார் உற்பத்தியின் தொடர்விளைவுகளான சூழல் மாசுபடல் மற்றும் அபிவிருத்தியில் பிரதேசவாரியான சமமின்மை போன்ற சமூகரீதியாக விரும்பப்படாத விளைவுகளை நீக்குவதற்கு.
- புதிய கைத்தொழில்களுக்கு உதவுவதற்கும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளில் முதலீடு செய்யவும்.
- சமுதாய குறிக்கோள்களுக்கு அமைவாக பணவீக்கம், வேலைவாய்ப்பு மட்டம் சென்மதி நிலுவை மற்றும் பொருளாதார வளர்ச்சி வீதம் ஆகியவற்றை முகாமை செய்வதற்கு.
- பாரிய பொருளியல் மந்தநிலையின்போது பொருளியற் செயற்பாடுகளை தூண்டுதல் மற்றும் உயர் பணவீக்கக் காலத்தின்போது கேள்வியை குறைத்தல் ஆகியவற்றின் மூலம் வியாபாரச் சுழற்சியின் ஏற்றத் தாள்வுகளை கட்டுப்பாட்டினுள் வைத்திருத்தல்.

NOT FOR SALE

**<u>விடை இல. 02</u>**

(a) மொத்த விலைத் தாக்கம் = வருமானத் தாக்கம் + பிரதியீட்டுத் தாக்கம்.

சகல ஜிபன் பொருட்களும் (giffen goods) தரங்குறைந்த பொருட்களாகும். எனவே வருமானக் தாக்கம் நேர்க் கணியமாகும். ஜிபன் பொருட்களின் விலை அதிகரிக்கும் போது அதிக விலையுடைய பொருட்களை வறிய மக்களால் வாங்கமுடியாததாலும், ஜிபன் பொருட்கள் இப்போதும் இலாபமானது என அவர்கள் கருதுவதாலும் அதன் கேள்விக் கணியமும் அதிகரிக்கும். ஜிபன் பொருட்கள் வழமையாக பிரதியீட்டுப் பொருட்கள் கிடைக்காததும் தரங்குறைந்த பொருட்களாகவும் இருப்பதனால், வருமானத் தாக்கம் பிரதியீட்டுத் தாக்கத்தை மேவி நிற்கும்.

பிரதியீட்டுத் தாக்கம் எதிர்க்கணியமாகும்.

ஜிபன் பொருட்களுக்கு வருமானத் தாக்கம் > பிரதியீட்டுத் தாக்கம் ஆக இருப்பதனால் மொத்த விலைத் தாக்கம் நேர்கணியமாக இருக்கும்.

(b)
$$Qd = Qs$$
$$-100Q + 20{,}000 = 20Q + 5{,}000$$
$$120Q = 15{,}000$$
$$Q = 125$$

$$-100 \times 125 + 20{,}000 = P$$
$$P = 7{,}500$$




(c) பொருளியல் இலாபம்: வருமானத்திற்கும் சந்தர்ப்பக் கிரயத்திற்கும் இடையிலான வித்தியாசம்.
கணக்கியல் இலாபம்: வருமானத்திற்கும் வெளிப்டைக் கிரயத்திற்கும் இடையிலான வித்தியாசம்.

உதா: ஒருவர் ரூபா 100,000 இனை முதலீடு செய்து ரூபா 120,000 இனை வருமானமாகப் பெற்றார். எனவே அவரின் கணக்கியல் இலாபம் ரூபா 20,000 ஆகும். எனினும், அவர் இந்தத் தொகையை வேறொரு வியாபாரத்தில் முதலீடு செய்திருந்தால், அவருக்கு ரூபா 150,000 கிடைத்திருக்கும். அதன்படி, அவர் ரூபா 30,000 பொருளியல் நட்டம் அடைந்துள்ளார்.

**<u>விடை இல. 03</u>**

(a) சிக்கன அளவுத்திட்டத்தை (economies of scale) ஏற்படுத்தும் காரணிகள்:

- கொள்வனவுச் சிக்கனம் - தொகையான கொள்வனவுக்கு விலைக் கழிவு பெறுதல்.
- நிதிச் சிக்கனம் - சிறு நிறுவனங்களிலும்பார்க்க பெரிய நிறுவனங்கள் மூலதனத்தை மிக இலகுவாகவும் குறைந்த வட்டிக்கும் பெறமுடிதல்.
- இடர்ச் (Risk) சிக்கனம் - பல்துறைப்படுத்த, இடர்களை பரப்ப அதிக இயலுமை
- ஆராய்ச்சிச் சிக்கனம் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு அதிக நிதியை ஒதுக்கக் கூடியதாக இருப்பதனால், சிறந்த நுட்பங்கள் மற்றும் செயன்முறைகளை பெறலாம். இதனால் நிறுவனம் அதன் சந்தைப் பங்கினை அதிகரித்துக் கொள்ளலாம்.
- சந்தைப்படுத்தல் (marketing) சிக்கனம் - பாரிய நிறுவனமொன்று அதன் விநியோக வலையமைப்பை நன்கு ஒழுங்குபடுத்த முடியும் (அதாவது அதிகமான விற்பனை நிலையங்கள்). இது விளம்பரத்தில் அதிகம் செலவிடுவதன்மூலம் விற்பனையை அதிகரிக்க பேரம்பேசுதலுக்கு வழியமைக்கும்.
- முகாமைச் சிக்கனம் - பெரிய நிறுவனமொன்று அதன் ஒவ்வொரு தொழிற்பாட்டை கையாள்வதற்கு விசேட தகுதிபெற்ற முகாமையாளரை ஈடுபடுத்தலாம். அதன்மூலம் முகாமை இயலுமை நன்கு பயன்படுத்தப்படலாம்.
- நிருவாகச் சிக்கனம் - பாரிய உற்பத்தி அளவிடை மூலமாக நிருவாக மேந்தலை அதிக உற்பத்தி அலகுகளுக்கு பரவப்படலாம்.
- தொழில்நுட்பச் சிக்கனம் - பாரிய எந்திரங்களை கொள்வனவு செய்து பராமரிக்க விகிதாசார அடிப்படையில் குறைவான செலவே ஏற்படும். எந்திரங்கள் நியம அளவுகளில் கிடைப்பதுடன், குறைந்தபட்ச உற்பத்தி வலுவை கொண்டிருக்கும். இவற்றில் முதலீடு செய்து அனுகூலங்களை பெறுவதற்கு இந்த குறைந்தபட்ச அளவுகள் சிறிய நிறுவனங்களுக்கு பெரிதாக தென்படலாம். (பாரிய எந்திரங்களின் பிரிக்க முடியாத தன்மை).
- ஊழியச் சிக்கனம் - சிறந்த ஊழியப் பிரிவு சாத்தியமாதலால், அதிக வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை பெறமுடியும்

(b)
- உச்ச நுகர்வு விலையிடல் (Peak load pricing) (மின், தொலைபேசி கட்டணம்)
- கணியக் கழிவுகள் (Quantity discounts)
- சேவைக் கட்டண விலைக் கழிவுகள் (Service charge price discounts)
- கருத்தரங்குகளில் மாணவருக்கான கட்டணம்
- விமான பயணச்சீட்டு விலையிடல் (Air ticket pricing)
- உற்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளில் விலை வேறுபாடு

(c) மொத்த நிலையான கிரயம் – உற்பத்தி அளவில் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமடையாத மொத்தக் கிரயத்தின் பகுதி.

மொத்த மாறும் கிரயம் - உற்பத்தி அளவில் மாற்றங்களுடன் நேரடியாக மாற்றமடையும் மொத்தக் கிரயத்தின் பகுதி

(d)

| ஏகபோக உரிமை Monopoly | சிலருரிமை Oligopoly |
|---|---|
| 1. தனியொரு விற்பனையாளர் | 1. சில விற்பனையாளர்கள் |
| 2. தனித்துவமான பொருள் | 2. ஒப்பீட்டடிப்படையில் கிட்டிய பிரதியீட்டுப் பொருட்கள் |
| 3. பிரவேச தடைகள் | 3. பிரவேச தடைகள் |
| 4. விலை நிர்ணயிப்பவர் | 4. சந்தர்ப்பத்தைப் பொறுத்து விலைத் தந்திரோபாயம் மாறுபடும். |

NOT FOR SALE

**<u>விடை இல. 04</u>**

(a) அரச இறைவரிப் பற்றாக்குறையை (fiscal deficit) குறைக்கவேண்டியதன் காரணங்கள்:

- அரச கடன்படல் தேவைப்பாடுகளை குறைத்து அதன்கூலம் பொதுக் கடனை (public debt) குறைப்பதற்கு.
- பணவீக்க அழுத்தங்களை குறைப்பதற்கு.
- தனியார் துறைக்கு முதலீடுகளுக்கான நிதி கிடைப்பதனை உறுதிசெய்வதற்கு.
- வட்டி விகிதங்களை குறைத்து அதன்மூலம் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு.
- சென்மதி நிலுவையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு.
- பேரண்டப் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தி அதன்மூலம் பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதற்கு.
- உள்நாட்டுச் சேமிப்புகளை அதிகரிப்பதற்கு.

(b) வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை – எதிர்வுகூறப்படும் அரச மொத்த வருமானத்திற்கும் எதிர்வுகூறப்படும் அரச மொத்த செலவினத்திற்கும் இடையிலான வித்தியாசம். (GDP யின் % மாக அளவிடப்படும்).

செலவினப் பக்க நடவடிக்கைகள்:

- மூலதன செலவினத்தை குறைத்தல்
- சமூக நிகழ்ச்சித் திட்டங்களின் செலவினங்களை குறைத்தல்

வருமானப் பக்க நடவடிக்கைகள்:

- வரி வருமானத்தை அதிகரித்தல் (உதா: வரித் தளத்தை அதிகரித்தல், வரி ஏய்ப்புக்களை (evasion) குறைத்தல், வரிச் சலுகைகளை ஒழுங்குபடுத்துதல்)
- வரிசாரா வருமானத்தை அதிகரித்தல் (உதா: பொது நிறுவனங்கள் வழங்கும் சேவைகளுக்கான கட்டணம் மற்றும் அறவீடுகளை அதிகரித்தல்)

(c) <u>நியாயப்படுத்தும்போது:</u>

அபிவிருத்தி அடைந்துவரும் ஒரு நாட்டைப் பொறுத்தமட்டில், வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை பிரதானமாக முதலீட்டுச் செயற்பாட்டு செலவினத்தினால் ஏற்படுமேயாகில், அது எதிர்காலத்தில் வருமானத்தை விளைவிப்பதுடன், ஏழை மக்களின் சேமநலனை அதிகரிக்கச் செய்யுமென நியாயப்படுத்தலாம்.

<u>நியாயப்படுத்தாதபோது:</u>

வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை;

- நேரில் வரிகள்மூலம் நிதியளிப்புச் செய்யப்படுவதனால், ஏழை மக்கள்மீது அதிக சுமையைக் கொடுக்கும்.
- நாட்டின் கடன்சுமையை அதிகரிக்கச் செய்யும்.

NOT FOR SALE

## Question No. 05

(a)

- ***வங்கி விகிதம்*** – இது மத்திய வங்கி முதற்தர உண்டியல்களை கழிவீடு செய்யும் அல்லது வர்த்தக வங்கிகளுக்கு கடன்கொடுக்கும் குறைந்தபட்ச விகிதமாகும். வங்கி விகிதத்தில் அதிகரிப்பு வட்டி விகிதங்களில் அதிகரிப்பை விளைவிப்பதுடன், பொதுமக்கள் பெறும் கடன் செலவுமிக்கதாகும். இதனால் வங்கிக் கடன்களுக்கான கேள்வி வீழ்ச்சியடையும். அதுபோல, வங்கி விகிதத்தை குறைப்பதன்மூலம் நாணய விரிவாக்கம் ஊக்குவிக்கப்படும்.
- ***திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்*** – இது பணநிரம்பலை கட்டுப்படுத்துவதற்காக திறந்த சந்தையில் அரச காப்பாவணங்களை விற்பனை மற்றும் கொள்வனவு செய்தலை குறிக்கும். திறந்த சந்தையில் திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்தல் பணநிரம்பலை ஒடுக்கவும் மத்திய வங்கி காப்பாவணங்களை கொள்வனவு செய்தல் பணநிரம்பலை விரிவுபடுத்தவும் வழிவகுக்கும்.
- ***சட்டநியதிசார்ந்த ஒதுக்கத் தேவைப்பாடு*** – இது ஒவ்வொரு வர்த்தக வங்கியும் அது பெற்ற வாடிக்கையாளர் வைப்புக்களில் ஒதுக்கமாக வைத்திருக்க வேண்டிய விகிதாசாரத்தை குறிக்கின்றது. இந்த ஒதுக்கத் தேவைப்பாட்டில் அதிகரிப்பு பண நிரம்பலை குறையச்செய்வதுடன் குறைப்பு பணநிரம்பலை விரிவுபடுத்தும்.
- ***கணியரீதியான மற்றும் தரரீதியான கட்டுப்பாடுகள்*** – மத்திய வங்கியானது வர்த்தக வங்கிகள் வழங்கும் மொத்த வங்கிக் கடன் தொகைக்கு உச்சவரம்பு விதிக்கலாம் (கணியரீதியான கட்டுப்பாடு). மத்தியவங்கி வீடமைப்பு போன்ற குறிப்பிட்ட சில துறைகளுக்கு வர்த்தக வங்கிகள் கடன் வழங்குவதை ஊக்கமிழக்கச் செய்யலாம் (தரரீதியான கட்டுப்பாடு)
- ***நெறிமுறைசார் கோரிக்கைகள் (Moral suasion)*** – மத்திய வங்கி அதற்கு வேண்டிய சில நடவடிக்கைகளை கடைப்பிடிக்க வர்த்தக வங்கிகளை கோரலாம். ஆனால் இது ஒரு சட்டரீதியான கட்டாயப்படுத்தல் அல்ல.

(b)

$c = a + by$

$a = 525$ (தரப்பட்டுள்ளது)

APC @ Y = 100

$$APC = \frac{c}{y} = \frac{a+by}{y} = \frac{a}{y} + b$$

y = 100 ஆக இருக்கும்போது c = 600

$$APC = \frac{600}{100} = 6$$

எனவே, $6 = \frac{525}{100} + b = 5.25 + b$

$\Longrightarrow$ b = 0.75 = MPC

பெருக்கி (Multiplier) $\frac{1}{1 - 0.75} = \frac{1}{0.25} = 4$

NOT FOR SALE

(c) நாணயக் கொள்கை (Monetary policy) என்பது மத்திய வங்கி கேள்வி முகாமைத்துவ தேவைகளுக்காக உபயோகப்படுத்தும் கொள்கை ரீதியான சாதனமாகும். இது பணநிரம்பல் அல்லது வட்டி விகிதங்களை உபயோகித்து பணச் சந்தையினூடாக செயற்படுத்தப்படும்.

<u>நோக்கங்கள்:</u>

- விலை ஸ்திரத்தன்மை (Price stability)
- வேலையற்றோர் எண்ணிக்கையில் வீழ்ச்சி
- சென்மதி நிலுவைக் கட்டுப்பாடு

## <u>விடை இல. 06</u>

(a) **சட்டரீதியான அதிகாரம் -** சட்டபூர்வ அதிகார அமைப்பிலிருந்து / முறைசார் அமைப்பில் வகிக்கும் பதவியிலிருந்து கிடைக்கும் அதிகாரம்.
**மதிப்புச் சார்ந்த அதிகாரம் -** கீழ்மட்ட ஊழியர் ஏற்றுக்கொள்வதன் மூலம் கிடைக்கும் அதிகாரம்.

(b) தொடர்பாடலுக்கான தடைகளாவன: செயன்முறைத் தடைகள் (process barriers), மனிதர்சார்ந்த தடைகள் (personal barriers), பௌதிகத் தடைகள் (physical barriers) மற்றும் கருத்து விளங்கற் தடைகள் (semantic barriers).

(c) ஊழியர் ஒருவர் எதிர்பார்க்கப்படும் அடிப்படை மட்டத்தில் தமது கடமைகளை செய்வதற்கு சுகாதார காரணிகள் (hygiene factors) நிறைவு செய்யப்படவதை முகாமை உறுதிசெய்தல் வேண்டும். எனினும், அடிப்படை மட்டத்திற்கு அப்பால் ஊழியர் கடமைகள் மேற்கொள்வதை ஊக்குவிப்பதற்கு உந்தூக்கக் காரணிகள் (motivation factors) அதிகரிக்கப்பட வேண்டும்.

## <u>விடை இல. 07</u>

(a) சூழற் பகுப்பாய்வானது நிறுவனத்தின் உட்புற மற்றும் வெளிப்புற சூழல்களின் மதிப்பாய்வு சம்பந்தமானதாகும். அரசியல், பொருளியல், சமுக கலாச்சார மற்றும் தொழில்நுட்ப சூழல்கள் போன்ற நிறுவனம் இயங்கும் வெளிப்புறச் சூழல் இயக்கத் தன்மை (dynamic in nature) கொண்டவையாகும். இது உட்புற சூழலை தாக்கத்திற்கு உள்ளாக்கும். வெளிப்புறச் சூழலின் இயக்கத் தன்மையானது நிறுவனத்தை மாற்றங்களுக்கு ஏற்ப மாறிக்கொள்ள அழுத்தத்தை கொடுப்பதுடன், தவறும் நிறுவனங்கள் மாற்றத்திற்கு ஏற்ப மாறிக்கொள்ளும் போட்டியாளரிடம் சந்தைப் பங்கினை இழக்கும்.

(b) மூன்று பிரதான வகையான நிறுவனக் கட்டமைப்புக்கள் உள்ளன:
தொழிற்பாடுசார்ந்த கட்டமைப்பு (functional) – விசேடத்துவ அடிப்படையில் கம்பனியை பிரிக்கும் (உதா: உற்பத்தி, சந்தைப்படுத்தல், நிதி ஆகியன).
பிரிவுவாரிக் கட்டமைப்பு (Divisional) – உற்பத்திப் பொருட்கள், பிரதேசங்கள், வாடிக்கையாளர் குழுமம் ஆகியவற்றின் அடிப்படையில் கம்பனியை பிரிக்கும்.
தாயக் கட்டமைப்பு (Matrix) – தொழிற்பாடு மற்றும் பிற கட்டமைப்புக்கள் சேர்ந்தவை.

| **பிரிவுவாரிக் கட்டமைப்பு** | **தாயக் கட்டமைப்பு** |
|---|---|
| உற்பத்திப் பொருட்கள், பிரதேசங்கள், வாடிக்கையாளர் குழுமம் ஆகிய அடிப்படையில் கம்பனியை பிரிக்கும் | தொழிற்பாடு மற்றும் பிற கட்டமைப்புக்கள் சேர்ந்தவை |
| அதிக கட்டுப்பாட்டை அனுமதிக்கும் – ஊழியர் தாம் இருக்கும் பிரிவு / கட்டமைப்புக்கு பதிலிறுக்குவர். | ஊழியர் இரண்டு மேல்மட்ட அலுவலருக்கு பதிலிறுக்க வேண்டி ஏற்படலாம். |

NOT FOR SALE

(c) ஒரு வியாபார நிறுவனம் பல்வேறு நாட்டதாரரை (stakeholders) கொண்டிருக்கும். உதாரணம்: பங்குதாரர்கள், ஊழியர்கள், முகாமையாளர், அரசாங்கம், அது தொழிற்படும் சமூகம் ஆகியன. அனேகமான நிறுவனங்கள் அவற்றின் பங்குதாரரை திருப்திப்படுத்துவதற்காக இலாப நோக்கில் தொழிற்படுகின்றன. எனினும் இவர்கள் நாட்டதாரரின் ஒரு பிரிவினரே. நுகர்வோரும் முழுச் சமூகமும் நல்ல அறிவை பெற்றுள்ள தற்கால வியாபாரக் கண்ணோட்டத்தில் நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நெறிமுறைக்கு அமைய தொழிற்பட வேண்டியது மட்டுமல்லாமல் சமூக ரீத்யாக பொறுப்புடையதாக இருக்கவேண்டிய அழுத்தத்திற்கும் ஆளாகின்றன. சமூகரீதியான பொறுப்புக்களை கொண்டிராத நிறுவனங்கள் வாடிக்கையாளரை மட்டுமல்லாது முதலீடு செய்யும் நிறுவனங்கள் நல்ல பெறுமதி உடையதாக இருக்கவேண்டுமென நம்பும் பங்குதாரர் மற்றும் சமூகத்திற்கு நல்ல பங்களிப்பை செய்வோரையும் இழக்கவேண்டி ஏற்படலாம்.

(d) வினைத்திறன் (Efficiency) – ஒரு விடயத்தை எந்தளவு நன்றாகச் செய்வது என்பது. அதாவது, ஒரு விடயத்தை அதிகுறைந்த செலவில் சாத்தியமானளவு குறைந்த நேரத்தில் முடித்தல்.

விளைவுத்திறன் (Effectiveness) – எவ்வளவு பயனுடையது என்பது. அதாவது, எந்தளவுக்கு நிறுவன இலக்குகள் அடையப்பெற்றன என்பது.

NOT FOR SALE

## பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்; அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.